01

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 3
இறுதிப் பரீட்சை 2007
ஒப்புரவு கொள்கைகள் - LWU 1202
காலம்: 03 மணித்தியாலம்

திகதி: 07.03.2007 நேரம்: மு.ப 10.00 – பி.ப 1.00 மணி வரை

பகுதி I இலிருந்து ஆகக்குறைந்தது ஒரு வினாவை தெரிவு செய்து எல்லமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி I – ஒப்புரவு கொள்கைகள்
(இப்பகுதியில் இருந்து ஒரு வினாவுக்கு மட்டும் விடைதருக)

1. பின்வரும் முதுரைகளை ஆங்கிலச்சட்டத்தின் கீழ் ஒப்புரவு அபிவிருத்தியுடன் தொடர்புறுத்தி விமரிசித்து விளக்குக.

   (அ) ‘ஒப்புரவு ஆள்சார்பாக இயங்கும்’.

   (ஆ) ‘ஒப்புரவு பரிகாரம் ஒன்று அற்று இருப்பதை அனுமதிப்பது இல்லை’

2. “ஒப்புரவு அடிப்படையில் பொதுச்சட்டத்திற்கு ஒரு மேல் பூச்சாக அல்லது ஒரு உபாங்கமாக இருந்துள்ளது”.

   ஆங்கிலச்சட்டத்தின் ஒப்புரவு அபிவிருத்தி மற்றும் தோற்றுவாய் எனபவற்றுக்கு விசேட அழுத்தம் கொடுத்து மேற்தரப்பட்ட கூற்றின் மீது கருத்துரை செய்க.

## பகுதி II – நம்பிக்கைகள் சட்டம்
(இப்பகுதியிலிருந்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக)

3. டில்சான், தோற்பொருள் தொழிற்சாலை ஒன்றை அருண் மற்றும் செல்வன் ஆகியோருக்கு கையளித்து, குறிப்பிட்ட தொழிற்சாலையை விற்று அதில் பெறப்படுகின்ற வருவாயை தினேஸ் என்பவனுடைய நன்மைக்காக முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தினான். இப்பணிப்புரைகளுக்கமைய அருண், செல்வன் ஆகியோர் தொழிற்சாலையை விற்றதோடு கொள்முதல் பணம் அருண் என்பவனால் பெற்றுக்கொள்ளப்பட்டது. அருண் அப்பணத்தை ஆறு மாதங்கள் வரை தன்னுடைய கையில் வைத்து இருந்தான். பின்பு அருண் கொள்முதல் பணத்தை பயன்படுத்தி தன்னுடைய பெயரில் வீடு ஒன்றை வாங்கினான்.

   நம்பிக்கைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் தனக்குள்ள உரிமைகளையும். அருண் செல்வன் ஆகியோருடைய கடப்பாடுகள் தொடர்பிலும் உமது ஆலோசனையை தினேஸ் கண்டறிய விரும்புகிறான். அவனுக்கு ஆலோசனை வழங்குக.

4. முன்னணி வியாபாரி ஒருவரான ஆனந்தன் பின்வரும் கையளிப்புகளை இறுதி விருப்பு ஆவணம் மூலம் மேற்கொள்கின்றான். இக்கையளிப்புகள் வலிதான தர்மநம்பிக்கையை உருவாக்குமா என்பதை ஆராய்க.

(அ) மத்திய மாகாணத்தில் தியான வகுப்புக்களை நடத்த சாயிமன்றத்திற்கு ரூ 2 மில்லியன்.

(ஆ) மாருதி சீமெந்து கொம்பனியின் பொது நூலகத்திற்கு புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கு ரூ. 1 மில்லியன்

(இ) சங்கத்தின் உறுப்பினர்களுக்கு,தொழிலாளர் உரிமைகள் பற்றி பயிற்சி பட்டறை நடாத்த இலங்கை தொழிலாளர் சங்கத்திற்கு ரூ. 500,000

(ஈ) தேவையான பட்டதாரி மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்க அணைத்து பல்கலைக்கழக பட்டதாரி மாணவர் ஒன்றியத்திற்கு ரூ. 10 மில்லியன்

5 (அ) தீர்க்கப்பட்ட வழக்குகளின் துணை கொண்டு நம்பிக்கை கட்டளைச்சட்டத்தின் பிரிவு 90 னுடைய எல்லையை விமரிசித்து விளக்குக.

(ஆ) அமலா, ரவி, விமலா ஆகியோர் A & B பங்குடமையின் பங்காளர்களாவார். அமலா பங்குடமைக்கு உரித்தான நிதியிலிருந்து தன்னுடைய பெயரில் காணி ஒன்றை வாங்கி வீடு ஒன்றை கட்டினாள். அமுதா ரவி இருவரும் நம்பிக்கை கட்டளைச்சட்டத்தின் பிரிவு/பிரிவுகளின் கீழ் அமலாக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க விரும்புகின்றனர்.

அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

6. மயூமி ஒரு சட்டத்தரணி அத்துடன் ஒரு மனித உரிமை செயற்பாட்டாளர் ,ஆவார். அவள் 1997ஆம் ஆண்டில் இருந்து மனித உரிமைகள் அமைப்பு ஒன்றில் சட்ட ஆலோசகராக செயற்பட்டு வருகிறாள். அவளுடைய சேவையை பாராட்டு முகமாக அந்த அமைப்பு வெளிநாட்டில் Phd படிப்பை மேற்கொள்வதற்காக புலமைப்பரிசில் ஒன்றை வழங்கியது. மயூமி இரத்தினபுரியில் ஒரு தோட்டத்தையும், கொழும்பு 07 இல் வீடு ஒன்றையும் கொண்டு இருந்தாள். தான் இலங்கை திரும்பியவுடன் தனது ஆதனங்கள் மீள கைமாற்றப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தன்னுடைய நிச்சயிக்கப்பட்ட கணவரான பாருக் என்பவனுக்கு ஆதனங்களை கைமாற்றம் செய்தாள் பாருக், மயூமியினுடைய நண்பி சக்தியாவை திருமணம் செய்தான் மயூமி இலங்கை திரும்பியவுடன் தன்னுடைய ஆதனங்களை மீள கைமாற்றுமாறு வேண்டினாள். எனினும் பாருக் ஆதனங்களை மீள கைமாற்ற மறுத்தான்

மயூமி உமது ஆலோசனையை நாடுகிறாள். அவளுக்கு ஆலோசனை வழங்குக.

7. (அ) வலிதான வெளிப்படையான நம்பிக்கை ஒன்றை உருவாக்குவதற்கு திருப்திப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகளை விளக்குக.

(ஆ) சில்பாவினுடைய இறுதி விருப்பு ஆவணத்திலுள்ள பின்வரும் கையளிப்புகள் வலிதான நம்பிக்கை ஒன்றை உருவாக்குகின்றதா என்பதை ஆராய்க.

(i) களுபோவில சர்வதேச பாடசாலையின் மாணவரான எனது பேரனுக்கு புத்தகங்கள் வாங்க பயன்படுத்துவதற்கென எனது சேமிப்புக் கணக்கிலிருந்து ரூ. 300,000/= , அத்துடன் எனது நண்பர்களுக்கு சைக்கிள்கள் வாங்க பயன்படுத்த சேமிப்புக் கணக்கின் மிகுதிப் பணம் சுரேசுக்கு

(ii) எனது பேரப்பிள்ளைகளுக்கு கணிணிகள் வாங்குவதற்கு பயன்படுத்தவென ரூ. 900,000/= எனது சகோதரன் ரமேஸ்க்கு

8. பின்வருவனவற்றைப்பற்றி குறிப்பு எழுதுக.

(அ) நம்பிக்கைகள் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 02
(ஆ) நம்பிக்கைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் நம்பிக்கையாளர்களுடைய தகமையீனங்கள்

(பதிப்புரிமைபெற்றது)